
வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாக பாராமுகமாக இருந்த வடசென்னை,

# தி.மு.க. ஆட்சி ஏற்பட்ட பிறகு வாடா சென்னையாக மாறி இருக்கிறது!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!








சென்னை,டிச.30-

கொளத்தூர் மற்றும் திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதிகளில், வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி பணிகளின் முன்னேற்றங்கள் குறித்து அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு செய்து, நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டுமென அலுவலர்களை அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (29.12.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி பணிகளான கொளத்தூர் ஏரிக்கரை பூங்கா பணிகளையும், குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தம் பணிகளையும், புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார் பதிவாளர் அலுவலகம் மற்றும் முதல்வர் படைப்பகம் என ஒருங்கிணைந்த “மக்கள் சேவை மையம்” கட்டுமானப் பணிகளையும், புதிய நவீன சந்தை கட்டுமானப் பணிகளையும், புதிய காவல் துணை ஆணையர் அலுவலகம் மற்றும் பெரவள்ளூர் காவல் நிலையம் கட்டுமானப் பணிகளையும், இரத்த சுத்திகரிப்பு மற்றும் மறுவாழ்வு மையம் ஆகிய பணிகளின் முன்னேற்றம் குறித்தும், அதனைத் தொடர்ந்து திரு.வி.க. நகர் தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில், மேம்படுத்தப்பட்டு வரும் பெரம்பூர் முரசொலி மாறன் பூங்கா கட்டுமானப் பணிகளையும், சந்திரயோகி சமாதி சாலையில் கட்டடப்பட்டு வரும் பல்நோக்கு மையம் கட்டுமானப் பணிகளையும், சுப்புராயன் தெருவில் கட்டடப்பட்டு வரும் முதல்வர் படைப்பகத்தின் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென அலுவலர்களை அறிவுறுத்தினார் .

அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:

வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாக பாராமுகமாக இருந்த வடசென்னை, திமுக ஆட்சி ஏற்பட்ட பிறகு வாடா சென்னையாக மாறி இருக்கிறது, வடசென்னை மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்த வடசென்னை வளர்ச்சி திட்டம் தொடங்கி செயல்படுத்தப்பட்டது. வடசென்னை மக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்பட்டு வருகிறது. வரும் 2026 ஜனவரி 10 ஆம் தேதி கொளத்தூர் எரிக்கரை மக்கள் பயன்பாட்டிற்கு வரும்.

மேலும், சென்னையில் சென்னை மாநகராட்சி சார்பில் 15 முதல்வர் படைப்பகம் உருவாக்கப்பட்டு வருகிறது, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 30 முதல்வர் படைப்பகங்கள் சென்னை மாநகர் முழுவதும் உருவாக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மூன்று “முதல்வர் படைப்பகம்” மாணவ மாணவிகளின் பயன்பாட்டிற்கு வந்துள்ளது மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

தவறுகளை இரும்பு கரம் கொண்டு அடக்குவேன் என கூறிய முதலமைச்சரின் கை துருப்பிடித்து விட்டது என நயினார் நாகேந்திரனின் பேச்சுக்கு அமைச்சர் அவர்களின் பதில்.

காமாலை கண் கொண்டவனுக்கு பார்ப்பதெல்லாம் மஞ்சள் என்று சொல்வதைப் போல் பாஜகவில் திரு.நயினார் நாகேந்திரன் அவர்கள் இன்னும் டேக் ஆஃப் ஆகாமல், லிப்ட் ஆகாமல் உள்ளார் என்பதால் இதுபோன்று சொல்லி தான் ஆக வேண்டும். தமிழ்நாட்டில் ஜாதியால், மதத்தால், இனத்தால் மக்களை பிளவு படுத்த முடியவில்லை என்ற ஏக்கத்தில் பாஜக உள்ளது, அதற்காக இப்படிப்பட்ட சொற்களை பயன்படுத்துவது இயல்பு. தமிழ்நாட்டில் நாம் ஒற்றுமையாக பயணித்துக் கொண்டிருக்கிறோம், திரு. நயினார் நாகேந்திரன் போன்றவர்களின் பிரிவினைவாதம் தமிழ்நாட்டில் எடுபடாது, அமைதி பூங்காவாக தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது, தமிழ்நாட்டை மணிபூராக மாற்ற நினைப்பவர்களின் கனவு இங்கு பலிக்காது. சட்டம் ஒழுங்கு முழுமையாக நிலைநாட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர். கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், உதவி பதிவுத் துறை தலைவர் (சென்னை வடக்கு) திருமதி. ரூபியா பேகம், சிஎம்டிஏ தலைமை பொறியாளர் மகாவிஷ்ணு, மாநகராட்சி நகர் நல அலுவலர் டாக்டர் ஜெகதீசன், சிஎம்டிஏ மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி. இந்துமதி, டாக்டர் பால் பிரின்ஸ்லி ராஜ்குமார், கண்காணிப்பு பொறியாளர்கள் பாலமுருகன், ராஜன்பாபு, உள்ளாட்சி பிரதிநிதிகள் ஐசிஎப் முரளிதரன், சந்துரு, மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் நாகராஜன், திருமதி.யோகபிரியா, திருமதி.ஸ்ரீதணி, மாநகராட்சி அலுவலர்கள், மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10.06.1941.

மறைவு 30.12.2024.

ரா. நாராயணசாமி

என்றும் நீங்கா நினைவுகளுடன்

குடும்பத்தினர்

முகலிவாக்கம் சென்னை 600125.

(மகன்) நா. மாதவன் - 98404 18017





வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், வானகரம் முதல் நிலை ஊராட்சியில் அண்ணா கிராம மறுமலர்ச்சி திட்டம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.1 கோடியே 43 இலட்சத்து 47 ஆயிரம் மதிப்பீட்டில் பயணியர் பேருந்து நிழற்குடை, குடிநீர் மேல்நிலை நீர் தேக்க தொட்டி, குளம் புணரமைத்தல் பணி, காரிய மேடை கட்டிடம் ஆகியவைகள் திறப்பு நிகழ்ச்சியில் மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியச் செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி, எஸ்.பி.அருள், என். ஜெயச்சந்திரன், என்.ரவி, கு.சதீஷ்குமார், எம்.ஜி.சாமிநாதன், ஜெ.ஜெயசுதா, ஏ.எம்.பர்மன்அலி, எஸ். நவீன்குமார், இ.தேவராஜ், கே.செந்தில்குமார், க.வரதன், எஸ்.பி.முரளிகிருஷ்ணன், எஸ்.எம். வேலாயுதம், என்.எம்.ஜானகிராமன், மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.




காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்தில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி தெருமுனை கூட்டம் மாமண்டூர் ஊராட்சியில் பூத் எண் 20-ல் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எச். சத்தியசாய் தலைமையில் நடைபெற்றது. இதில் தொகுதி பொறுப்பாளர் எம்.டி.ஆர். சாரதி மணிமாறன் 2026 சட்டமன்ற தேர்தலையொட்டி ஆலோசனைகள் வழங்கினார். உடன் துர்கேஷ், எம்.எஸ்.ஆறுமுகம், தனசேகர், தமிழரசன், சித்ரா, திருஞானசெல்வன், தேவராஜ், பார்த்தசாரதி, கற்பகம் பாஸ்கர், டி.ஜான் ராஜ, சத்யகுமார், குமார், சக்திவேல், பாபு, மனோகர், சினிவாசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 313 வது நாள்!

## துறைமுகம் தொகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



சென்னை ,டிச.30

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 313 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (29.12.2025), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 59 அ, காந்திநகர் அண்ணா சாலை. 2) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 55, எழுகிணறு பூங்கா அருகில், ஏழு கிணறு தெரு. சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம். விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா. பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் துரை முருகன் – டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்பு!

# சிட்லப்பாக்கம் ஏரி - சிறுவர் விளையாட்டுத் திடல் - பூங்கா திறக்கும் விழா!

## மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தாம்பரம், டிச.30-

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்ற தொகுதியில் உள்ள சிட்லபாக்கம் ஏரியை ஆழப்படுத்தி நடைபாதை அமைத்து சிறுவர் விளையாட்டு திடல் மற்றும் பூங்காவை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்திட இன்று (30.12.2025) மாலை 4 மணிக்கு கழகப் பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற மக்களவை கழகக் குழு தலைவர், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு, குறு சிறு,(ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு திறந்து வைக்க உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், மாநகராட்சி மேயர், துணை மேயர், மண்டலக் குழு தலைவர்கள், பகுதி, ஒன்றிய, வட்ட,செயலாளர், நிர்வாகிகள், மாவட்ட, மாநகர, பகுதி, வட்ட, இளைஞர் அணி, உள்ளிட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள், பொது மக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்திட, மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஜனவரி 1 முதல் நெல்லை, முத்துநகர், பொதிகை உள்ளிட்ட 7 ரயில்களின் நேரம் மாற்றம்!

### தெற்கு ரயில்வே அறிவிப்பு!

சென்னை, டிச.30-

ஜன. 1ம் தேதி முதல் விரைவு ரயில்களின் நேர அட்டவணை மாற்றி அமைக்கப்பட உள்ளது. தண்டவாளங்கள் மேம்படுத்தப்பட்டு, மின் மயமாக்கல் பணிகள் முடிவடைந்த நிலையில் புதிய அட்டவணை வெளியானது. புதிய அட்டவணையின்படி வருகின்ற 2026 ஜனவரி 1ம் தேதி முதல், சென்னை எழும்பூரில் இருந்து தென் மாவட்டங்களுக்கு புறப்படும் ரயில்களின் நேரம் மாற்றப்பட்டுள்ளது. அதேபோல் மறு மார்க்கத்தில் தென் மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு வரும் ரயில்களின் நேரமும் மாற்றப்பட்டுள்ளது என தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு செல்லும் ரயில்களின் நேர மாற்றம்:

1. சென்னை எழும்பூரில் இருந்து திருச்சிக்கு செல்லும் சோழன் எக்ஸ்பிரஸ் காலை 7:45 மணிக்கு பதிலாக காலை 8:00 மணிக்கு புறப்படும்.

2. சென்னை எழும்பூரில் இருந்து குருவாயூர் வரை செல்லும் எக்ஸ்பிரஸ் காலை 10:20 மணிக்கு பதிலாக, காலை 10:40 மணிக்கு புறப்படும்.

3. எழும்பூரில் இருந்து மதுரைக்கு செல்லும் வைகை எக்ஸ்பிரஸ், மதியம் 1:45 மணிக்கு பதிலாக 30 நிமிடங்கள் முன்கூட்டியே அதாவது 1:15 மணிக்கு புறப்படும்.

4. எழும்பூரில் இருந்து திருநெல்வேலி வரை செல்லும் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் மதியம் 2:45 மணிக்கு பதிலாக 3:05 மணிக்கு புறப்படும்.

5. எழும்பூரில் இருந்து தூத்துக்குடி வரை செல்லும் முத்துநகர் எக்ஸ்பிரஸ் இரவு 7:30 மணிக்கு பதிலாக, இனி 15 நிமிடங்கள் முன்கூட்டியே அதாவது, 7:15 மணிக்கு புறப்படும்.

6. எழும்பூரில் இருந்து இரவு 8:10 மணிக்கு செல்லும் பொதிகை எக்ஸ்பிரஸ், இனி 35 நிமிடங்கள் முன்கூட்டியே அதாவது, 7:35 மணிக்கு புறப்படும்.

7. எழும்பூரில் இருந்து இரவு 7:15 மணிக்கு புறப்பட்டு செல்லும் ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ், இனி 8:35 மணிக்கு புறப்படும்.

8. எழும்பூரில் இருந்து இரவு 8:40 மணிக்கு புறப்பட்டு செல்லும் நெல்லை எக்ஸ்பிரஸ், இனி 8:50 மணிக்கு புறப்படும்.

எழும்பூரில் இருந்து திருச்செந்தூர் வரை செல்லும் செந்தூர் எக்ஸ்பிரஸ் மற்றும் கேரளாவின் கொல்லம் வரை செல்லும் அனந்தபுரி எக்ஸ்பிரஸ் ஆகிய ரயில்களின் நேரம் மாற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.58, நேவல் மருத்துவமனை 2வது தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 36.40 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பல்நோக்குக் கூடக் கட்டுமானப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.




சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி திமுக சார்பாக ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ரெட்ஹில்ஸ் எம்.எஸ்.மணிகண்டன் ஏற்பாட்டில் ஒன்றிய கழக செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலையில் துணை முதல்வர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நல்லூர் ஊராட்சி 49 திருநங்கையர்களுக்கு நலதிட்டங்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் திருமதி ஆர். சாஷா, பொன்.கோதண்டன், சீனிவாசன், துளசி ராஜேந்திரன், கே.தமிழ்வாணன், வழக்கறிஞர் சரவணன், திருநங்கை சுதா, பூஜா, ரூபேஷ், தமிழரசன், ஜீவா, நரேந்திரபாபு, நித்தியானந்தம், ஹரிஷ், விக்கி, சூர்யா, லோகேஷ், கவின், பாலாஜி, வேலு, கரிமுல்லா, லட்சுமணன், புவனேஷ், ஜெகன், வீரமணிகண்டன், நரேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.